சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – தமிழில் சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டம் – 2017–ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்களுக்கும், அதனைப் பதிப்பித்த பதிப்பகத்தார்களுக்கும் பரிசுத் தொகை வழங்குதல் – ரூ.11,80,000/–க்கு (ரூபாய் பதினோரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2.2)த் துறை

அரசாணை (ப) எண். 67

நாள் 13.07.2021
பிலவ, ஆனி–29
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டவை: –

1. அரசாணை (நிலை) எண்.157, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 20.07.2001.
2. அரசாணை (நிலை) எண்.75, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 16.03.2004.
3. அரசாணை (நிலை) எண்.20, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 17.01.2008.
4. அரசாணை (நிலை) எண்.2, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 04.01.2010.
5. அரசாணை (நிலை) எண்.19, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 17.01.2011.
6. அரசாணை (ப) எண்.22, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 17.01.2011.
7. அரசாணை (நிலை) எண்.131, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (தவ2–2)த் துறை, நாள் 22.05.2012.
8. அரசாணை (ப) எண்.176, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ.2–2)த் துறை, நாள் 31.12.2020.

படிக்க: –

9. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ஆ.மொ2/2502/ 2018, நாள் 18.09.2020 மற்றும் 09.01.2021.

******

ஆணை:

மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழில் வெளியிடப்பட்ட சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.20,000/–ஐ ரூ.30,000/–ஆக (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) உயர்த்தியும், பதிப்பகத்தாரருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.5000/–ஐ ரூ.10,000/–ஆக (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) உயர்த்தியும் ஆணைகள்

வெளியிடப்பட்டன. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் நூல்களை தெரிவு செய்ய வகைப்படுத்தப்பட்ட தலைப்புகளில் மகளிர் இலக்கியம் மற்றும் தமிழர் வாழ்வியல் ஆகிய இரண்டு புதிய வகைப்பாடுகளை கூடுதலாக சேர்த்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட 33 வகைப்பாடுகளில் 28 வகைப்பாடுகளுக்கான நூல்களின் நூலாசிரியர்களுக்கும் மற்றும் அதனைப் பதிப்பித்த 28 பதிப்பகங்களுக்கும் பரிசு வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டது.

3. மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழில் வெளியிடப்படும் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட 33 வகைப்பாடுகளில், 2017-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு, போட்டிக்கு வரப்பெற்ற நூல்களில், மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பரிசுக்கெனத் தெரிவு செய்யப்பட்ட 28 நூல்களின் நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை (ரூ.30,000/- X 28) ரூ.8,40,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகை (ரூ.10,000 x 28) ரூ.2,80,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மற்றும் சில்லறைச் செலவினங்களுக்காக ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.11,80,000/- (ரூபாய் பதினோரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழில் சிறந்த நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட 33 வகைப்பாடுகளுள் 2017-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள 28 வகைப்பாடுகளின் நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை (ரூ.30,000/- X 28) ரூ.8,40,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) அந்நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பரிசுத் தொகை (ரூ.10,000 x 28) ரூ.2,80,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மற்றும் சில்லறைச் செலவினங்களுக்காக ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.11,80,000/-க்கு (ரூபாய் பதினோரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படுவதுடன், 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள நிதியொதுக்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் :-

> "2202 பொதுக் கல்வி – 05 மொழி வளர்ச்சி – 001 நெறிப்படுத்தலும், நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA தமிழ் வளர்ச்சி இயக்ககம் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
> (த.தொ.கு 2202 05 001 AA 30903) IFHRMS
> (த.தொ.கு 2202 05 001 AA 0934) OLD

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை, தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு, தொகுதி-1-ன் பிரிவுக் கூறு 99-இன்கீழ் முன்பணமாக பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அரசு அனுமதி அளிக்கிறது. மேலும் இம்முன்பண பட்டியைச் சிறப்பு நேர்வாக கருதி அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இத்தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழை ஒரு மாத காலத்திற்குள் அரசிற்கு அனுப்பி வைக்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.27848/நிதி(தவ(ம)செ)/2021, நாள் 08.07.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.

நகல்:
நிதித் (தவ (ம) செ) துறை, சென்னை-9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/ உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சு. பாரதி 13/7/21
பிரிவு அலுவலர்.